


**07. 05. 2026**

## தலைப்புச் செய்திகள்

1. தமிழகத்தில் புதிய அரசு அமையும் நடவடிக்கையின் ஒருபகுதியாக த.வெ.க தலைவர் திரு.விஜய், தமிழக ஆளுநர் திரு. விஸ்வநாத் அர்லேக்கரை இன்று சந்தித்து பேசினார்.

2. தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ள த.வெ.க-வை ஆட்சி அமைக்க ஆளுநர் அழைப்பு விடுக்க வேண்டும் என்று அரசியல் கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.

3. வளர்ச்சி அடைந்த நாடாக இந்தியா உருவாக விவசாயிகளின் மேம்பாட்டின் அவசியத்தை மத்திய வேளாண் அமைச்சர் திரு.சிவ்ராஜ்சிங் சவ்ஹான் எடுத்துரைத்தார்.

4. திருச்சி, கரூர், நெல்லை கன்னியாகுமரி உள்ளிட்ட 14 மாவட்டங்களில் இன்று கன மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. சீனாவில் நடைபெறும் சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதியில் இந்திய இணை இன்று களமிறங்குகிறது.

## இனி விரிவான செய்திகள்

***********

த.வெ.க - ஆளுநர்

தமிழ்நாட்டில் புதிய அரசு அமைப்பது தொடர்பான நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

சட்டப்பேரவை தேர்தலில் தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ள தமிழக வெற்றிக் கழகம் ஆட்சி அமைக்க 118 உறுப்பினர்களின் ஆதரவு தேவை என்ற நிலையில், அக்கட்சி தலைவர் திரு.விஜய் இன்று ஆளுநர் திரு. ராஜேந்திர விஸ்வநாத் அர்லேக்கரை மக்கள் மாளிகையில் சந்தித்து பேசினார்.

ஆளுநரை, திரு.விஜய் இரண்டாவது முறையாக சந்தித்துள்ளார்.

ஆளுநர் அழைப்பு விடுத்ததற்கு ஏற்ப இந்த சந்திப்பு நிகழ்ந்ததாக தெரிகிறது.

திரு.அர்லேக்கர், கேரள மாநிலத்தின் ஆளுநராகவும், செயல்படுவதால் இன்று அவர் கேரளம் செல்வதற்கு முன்பாக, திரு.விஜய்யை சந்தித்து அரசு அமைப்பது தொடர்பான சில விளக்கங்களை கோரியுள்ளதாக தெரிகிறது.

முன்னதாக நேற்று ஆளுநரை சந்தித்த திரு.விஜய் அவரிடம் த.வெ.க சட்டப்பேரவை உறுப்பினர்களின் பட்டியலையும், காங்கிரஸின் ஆதரவு கடிதங்களையும் வழங்கியுள்ளார்.

தமிழ்நாட்டில் நிலையான அரசு அமையும் வகையில் பெரும்பான்மை பலம் இருந்தால் மட்டுமே ஆட்சி அமைக்க த.வெ.க-விற்கு ஆளுநர் அழைப்பு விடுப்பார் என்று மக்கள் மாளிகை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் திரு.விஜய்க்கு ஆதரவு அளிப்பது குறித்து, விடுதலை சிறுத்தை கட்சியின் உயர் மட்ட கூட்டத்திற்கு பின்னர் முடிவெடுக்கப்படும் என்று அக்கட்சி தலைவர் திரு.திருமாவளவன் கூறியுள்ளார்.

தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ள தமிழக வெற்றி கழகம் ஆட்சி அமைப்பதற்கான வாய்ப்பை ஆளுநர்

வழங்க வேண்டும் என்று திரு.திருமா வளவன் மற்றும் இடதுசாரி கட்சிகள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

இந்நிலையில் திமுக தலைவர் திரு.மு.க.ஸ்டாலினை அவரது இல்லத்தில் விடுதலை சிறுத்தைகள், இந்திய கம்யூனிஸ்ட் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர்கள், இன்று சந்தித்து ஆலோசனை மேற்கொண்டனர்.

இதனிடையே திரு.விஜய் ஆளுநரை சந்தித்த பின்னர் த.வெ.க நிர்வாகிகளுடன் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறிதது ஆலோசனை மேற்கொண்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

***********

<u>திமுக</u>

தமிழக வெற்றி கழகம் ஆட்சி அமைக்க திமுக எவ்வித குறுக்கீடும் செய்யாது என்று அக்கட்சியின் தலைவர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

ஊடகத்திற்கு அவர் அளித்த பேட்டியில் மாநிலத்தில் புதிய ஆட்சிய அமைய மக்கள் அளித்த தீர்ப்பை திமுக மதிப்பதாக கூறினார்.

மீண்டும் ஒரு தேர்தல் நடைபெறுவதையோ, அல்லது அரசியல் சாசன நெருகடி ஏற்படுவதையோ தமது கட்சி விரும்பவில்லை என்று குறிப்பிட்டார்.

அஇஅதிமுகவுடன் இணைந்து திமுக புதிய ஆட்சி அமைக்க உள்ளதாக வெளியாகும் வதந்திகளையும் திரு.ஸ்டாலின் மறுத்துள்ளார்.

இதனிடையே திமுக சட்டப்பேரவை குழு தலைவரை தேர்வு செய்வதற்கான உறுப்பினர்களின் கூட்டம் சென்னையில் இன்றுமாலை நடைபெறுகிறது.

***********

அஇஅதிமுக

அஇஅதிமுக சார்பில் புதிதாக சட்டப்பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அனைவரும், கட்சியின் பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமியை சந்தித்து, அடுத்த கட்ட நகர்வுகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டதாக அக்கட்சியின் தகவல் தொழில்நுட்ப பிரிவு தெரிவித்துள்ளது.

ஊடகங்கள் அஇஅதிமுக தொடர்பாக ஆதாரமற்ற செய்திகளை வெளியிடுவதாகவும் இப்பிரிவு குறை கூறியுள்ளது.

***********

புதுச்சேரி

புதுச்சேரியில் புதிய அரசு அமையும் வகையில் முதலமைச்சர் திரு.ரங்கசாமி தமது முதலமைச்சர் பதவியை இன்று ராஜினாமா செய்துள்ளார்.

தமது ராஜினாமா கடிதத்தை துணை நிலை ஆளுநர் கைலாஷ் நாதனை சந்தித்து அவர் வழங்கினார்.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் மொத்தமுள்ள 30 சட்டப்பேரவை தொகுதிகளில் என்.ஆர். காங்கிரஸ் தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி 18 இடங்களை கைப்பற்றியுள்ள நிலையில், இந்த கூட்டணி மீண்டும் ஆட்சி அமைக்க உள்ளது.

திமுக 5 இடங்கள், த.வெ.க 2, காங்கிரஸ், நேயம் மக்கள் கழகம் தலா 1 இடத்தையும் கைப்பற்றியுள்ளது.

***********

கேரளா

கேரள மாநிலத்தில் புதிய அரசு அமைப்பது தொடர்பாக காங்கிரஸ் சட்டப்பேரவை உறுப்பினர்களின் கூட்டம் இன்று நடைபெறுகிறது.

மொத்தமுள்ள 140 சட்டப்பேரவை தொகுதிகளில் 102 இடங்களை கைப்பற்றியுள்ள காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னனி, ஆட்சி

அமைக்க உள்ள நிலையில் அக்கட்சியின் சட்டப்பேரவை தலைவர் இக்கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்படுவார்.

***********

<u>தேர்தல் ஆணையம்</u>

தமிழகத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் விலக்கி கொள்ளப்படுவதாக தேர்தல் ஆணையம் இன்று அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

இதேபோல் அஸ்ஸாம் கேரளம் மேற்குவங்கம் புதுவை யூனியன் பிரதேசங்களிலும் தேர்தல் விதிமுறைகள் விலக்கிகொள்ளப்பட்டுள்ளது.

***********

<u>ஆபரேசன் சிந்தூர்</u>

நாட்டை பாதுகாப்பதில் முப்படைகளின் வீரத்தையும், துணிச்சலையும் ஆபரேசன் சிந்தூர் துல்லிய தாக்குதல் உலகிற்கு பறைசாற்றுவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

ஆபரேசன் சிந்தூர் துல்லிய தாக்குதல் ஓராண்டு நிறைவை ஒட்டி அவர் வெளியிட்டுள்ள செய்தியில் தற்சார்பு இந்தியா மற்றும் பாதுகாப்புத்துறையின் வலிமையை இந்த துல்லிய தாக்குதல் எடுத்துரைப்பதாக குறிப்பிட்டார்.

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் பிரதமர் திரு.நரேந்திரமோடி, உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷா உள்ளிட்டோர் வெளியிட்ட செய்தியில், நாட்டின் ஆயுத படைகளின் ஈடு இணையற்ற துணிச்சலையும், மன உறுதியையும் ஆபரேசன் சிந்தூர் துல்லிய தாக்குதல் எடுத்துரைப்பதாக கூறியுள்ளனர்.

இத்தினத்தை ஒட்டி ஜெய்பூரில் முப்படைகளின் தலைவர் திரு.அனில் சவ்ஹான் தலைமையில் பாதுகாப்பு படை தளபதிகள் மாநாடு நடைபெறுகிறது.

***********

காதி கிராம்

காதி கிராம தொழில் ஆணையத்தின் மூலமான பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்க திட்ட செயலாக்கம் தொழில் முனைவோர்களையும், வேலை வாய்ப்புகளையும் உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிப்பதாக சிறு குறு தொழில் நிறுவனங்கள் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஐந்தாண்டுகளில் 15ஆவது நிதி ஆணையத்தின் கீழ் சிறு தொழில் நிறுவனங்கள் துரித வளர்ச்சியுடன வலுவடைந்திருப்பதாகவும், கூறியுள்ளது.

13 ஆயிரத்து 554 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டை முழுமையாக பயன்படுத்தி இலக்கையும் மிஞ்சி 4 லட்சத்து 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறு தொழில் நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சகம் கூறியுள்ளது.

இதன்மூலம் 36 லட்சத்திற்கும்அதிகமானோர் வேலை வாய்ப்பு பெற்று வாழ்வாதாரம் மேம்பட்டுள்ளதாகவும் அடித்தட்டு பொருளாதாரம் வளர்ச்சி அடைந்ததாகவும் அமைச்சகம் தெரிவித்தது.

***********

சிவ்ராஜ்சிங்

வளர்ச்சி அடைந்த நாடாக இந்தியா உருவாக விவசாயிகளின் மேம்பாடு மிக அவசியம் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு.சிவ்ராஜ்சிங் சவ்ஹான் தெரிவித்துள்ளார்.

உத்திரபிரதேச மாநிலம் லக்னோவில் கனிகள் வள மாநாட்டில் இன்று துவக்க உரையாற்றிய அவர், தோட்டக்கலை துறையின் அனைத்து அம்சங்களுக்கும் உயர் முன்னுரிமை வழங்கி ஏற்றுமதியை அதிகரிக்கும் வகையில் சிறப்பு பிரிவு ஒன்று ஏற்படுத்தப்படும் என்றார்.

இந்தியா தற்போது சராசரியாக ஆயிரத்து 129 லட்சம் மெட்ரிக் டன் கனிகளை உற்பத்தி செய்வதாக கூறினார்.

ஆனால் ஏற்றுமதி அளவோ வெறும் 14 லட்சம் மெட்ரின் டன் மட்டுமே என்று சுட்டிக்காட்டினார்.

மத்திய அரசின் சீரிய முயற்சிகள் காரணமாக பல்வேறு நாடுகளின் சந்தைகள் இந்திய கனிகளுக்காக திறக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

***********

<u>மன்சூக் மாண்டவியா</u>

நாட்டில் வேலை வாய்ப்புகளுக்கான தொடர் முயற்சிகளின் காரணமாக வேலை வாய்ப்பின்மை விகிதம் 3.2 சதவிகிதமாக குறைந்துள்ளது என்று மத்திய தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை அமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் 40 வயதிற்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கான வருடாந்திர இலவச மருத்துவ பரிசோதனை திட்டத்தை இன்று துவக்கிவைத்து பேசிய அவர், புதிய தொழிலாளர் சட்டங்களின் கீழ் இந்நடைமுறை தொடங்கப்பட்டுள்ளதாக கூறினார்.

தொழில் சார்ந்த சுகாதார கட்டமைப்பை வலுப்படுத்தி உழைக்கும் வர்க்கத்தினருக்கு விரிவான நல ஆரோக்கியத்தை இந்த திட்டம் உறுதி செய்வதாக குறிப்பிட்டார்.

உழைக்கும் வர்க்கத்தினர் மற்றும் இளைய சக்தியின் ஆற்றல் கடந்த 12 ஆண்டுகளாக கணிசமாக அதிகரித்துள்ளது என்று அவர் எடுத்துரைத்தார்.

நடுத்தர பிரிவினர் மற்றும் பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களுக்கு சமூக பாதுகாப்பையும் அரசு உறுதி செய்து வருவதாக கூறினார்.

இதன்காரணமாக சமூக பாதுகாப்பு திட்டங்களில் பயன்பெறும் மக்களின் எண்ணிக்கை 94 கோடியாக தற்போது அதிகரித்துள்ளதாக கூறினார்.

இந்த பாதுகாப்பு திட்டத்தின் கீழ் பயன்பெறும் தொழிலாளர் காப்பீட்டு கழகத்தின் ஊழியர்களின்

எண்ணிக்கை 15 கோடியாக உயர்ந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்..

அவசர கால சுகாதார மருத்துவ சிகிச்சை, மகப்பேறு பயன்கள், பணிகளின் போது உயிரிழப்பிற்கான நிவாரணம், வேலை வாய்ப்பின்மையின்போது நிதி உதவி போன்றவற்றிற்கு இந்த திட்டம் வகை செய்கிறது.

***********

இருவரி

தமிழ்நாட்டில் உள்ள அரசு கலை அறிவியல் கல்லூரிகளில் வரும் கல்வியாண்டு இளநிலை பட்டப்படிப்பு முதலாம் ஆண்டு மாணாக்கர் சேர்க்கைக்கு இணையதளத்தில் இன்றுமுதல் வரும் 29ஆம் தேதிவரை விண்ணப்பிக்கலாம் என்று கல்லூரி கல்வி ஆணையர் தெரிவித்துள்ளார்.

கிருஷ்ணகிரி மாவட்ட இசைப்பள்ளியில் வரும் கல்வியாண்டிற்கான மாணாக்கர் சேர்க்கை இன்றுமுதல் நடைபெறுவதாக ஆட்சித்தலைவர் திரு.தினேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் முன்னாள் படைவீரர்கள் அவர்தம் வாரிசுதாரர்கள் வரும் கல்வியாண்டில் இட ஒதுக்கீட்டின் கீழ் மேற் படிப்பில் சேர நேரில் விண்ணப்பிக்கலாம் என ஆட்சித்தலைவர் திருமதி பொற்கொடி தெரிவித்துள்ளார்.

***********

கொடைக்கானல்

கொடைக்கானல் பிரயன்ட் பூங்காவில் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் மீன் குளத்துடன் கூடிய புதிய செயற்கை அருவி உருவாக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

***********

நெல்லை

நெல்லை மாவட்டம் களக்காடு தலையணைக்கு நிர்வரத்து குறைந்துள்ளதால் சுற்றுலா பயணிகளுக்கு வனத்துறை தடை விதித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

***********

திருவாரூர்

திருவாரூர் அருள்மிகு தியாகராஜசுவாமி திருக்கோவில் தெப்பத்திருவிழா நாளை தொடங்குவதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

வாய்ஸ்

***********

டென்னிஸ்

சீனாவில் நடைபெறும் சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதியில் இந்தியாவின் ரித்விக் பொல்லிப்பள்ளி, அர்ஜுன் கதே இணை – ஜப்பான், தைவான் இணையை இன்று எதிர்கொள்கிறது.

***********

கிரிக்கெட்

ஐ.பி.எல் 20-20 கிரிக்கெட் போட்டியில் லக்னோவில் இன்றிரவு ஏழரை மணிக்கு லக்னோ சூப்பர் ஜெயன்ஸ் - ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களுருவை எதிர்கொள்கிறது.

***********